RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்- 354 டிசம்பர்.24 2025 புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## வெளிநாடுகளில் ராகுல் மீண்டும் அதே பல்லவி!




பெர்லின், டிச.24-

மத்திய அரசு விசாரணை அமைப்புகளை ஆயுதமாக பயன்படுத்துகிறது என ஜெர்மனியில் நடந்த நிகழ்ச்சியில் லோக்சபா எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல் குற்றம் சாட்டியுள்ளார். வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் போது எல்லாம், இந்திய அரசை குற்றம்சாட்டும் வகையில் பேசுவது ராகுலுக்கு வழக்கம். தற்போது ஜெர்மனியின் பயணத்திலும் மத்திய அரசு மீது குற்றம்சாட்டி பேசி இருக்கிறார். ஜெர்மனியின் பெர்லினில் உள்ள ஹெர்டி பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் ராகுல் பேசியதாவது: மத்திய அரசு விசாரணை அமைப்புகளை ஆயுதமாக பயன்படுத்துகிறது. அவர்கள் விசாரணை புலனாய்வு அமைப்புகளை கைப்பற்றுகின்றனர். அமலாக்கத்துறை மற்றும் சிபிஐ பாஜவினர் மீது எந்த வழக்குகளையும் பதிவு செய்வதில்லை. பாஜவிடம் உள்ள பணத்தையும், எதிர்க்கட்சியிடம் உள்ள பணத்தையும் பாருங்கள். ஜனநாயக அமைப்பின் மீது தாக்குதல் நடக்கிறது. இதை எதிர்ப்பதற்கான வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

நாங்கள் பாஜவை எதிர்த்து போராடவில்லை. மாறாக இந்திய விசாரணை அமைப்புகளை அவர்கள் கைப்பற்றுவதை எதிர்த்து போராடுகிறோம். இண்டி கூட்டணியின் அனைத்துக் கட்சிகளும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் சிந்தாந்தத்துடன் உடன்படவில்லை. எங்கள் கூட்டணியில் சில கட்சிகள் உள்ளாட்சி தேர்தலில் ஒன்றை ஒன்று எதிர்த்து போட்டியிட்டன. அதேநேரத்தில் நாங்கள் பார்லிமென்டில் ஒன்றுபட்டுள்ளோம். சித்தாந்தம் மத்திய அரசு மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் தொலைநோக்கு பார்வையை ஏராளமான மக்கள் ஆதரிக்கவில்லை. இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் மத்திய அரசு மற்றும் ஆர்எஸ்எஸ் அமைப்பை விட முற்றிலும் மாறுபட்ட சிந்தனைகளை கொண்டுள்ளனர். இந்தியாவில் பலர் பிரதமர் மோடியை ஆதரிக்கின்றனர். அவரது சித்தாந்தத்துடனும், அவர் கொண்டுள்ள இந்தியாவைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையுடனும் பலர் உடன்படவில்லை. அந்த தொலைநோக்குப் பார்வை தோல்வியடையும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

மேலும் அதில் மிகப்பெரிய பிரச்னைகள் உள்ளன. இது இந்தியாவில் மிகப்பெரிய பதட்டங்களை உருவாக்கி, இந்திய மக்களை ஒருவருக்கொருவர் சண்டையிட வைக்கும். நாங்கள் அதை எதிர்த்துப் போராடுவோம். இது இந்தியாவில் இரண்டு தொலைநோக்குப் பார்வைகளுக்கு இடையிலான மோதல். இவ்வாறு ராகுல் பேசினார்.

## பாமக பொதுக்குழு விவகாரம்: ராமதாஸ் மீது தேர்தல் ஆணையத்தில் அன்புமணி புகார்



சென்னை: டிச.24-

கட்சியின் பெயரை தவறாக பயன்படுத்தி சட்டவிரோதமாக பாமக செயற்குழு, பொதுக்குழு நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையத்தில் ராமதாஸ் மீது அன்புமணி தரப்பு புகார் அளித்துள்ளது.

பாமக சார்பில் ‘2025 க்கு விடை கொடுப்போம். 2026ஐ வரவேற்போம்’ என்ற தலைப்பில் புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வரும் 29ம் தேதி சேலம் 5 ரோடு ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண அரங்கில் நடைபெற உள்ளது. இதில் கட்சி வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்தும், 2026 சட்டப்பேரவை தேர்தல் குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளது என்று பாமக நிறுவனர் ராமதாஸ் சில தினங்களுக்கு முன்பு அறிவித்தார்.

இந்நிலையில், பாமக தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், ‘பாமக செயற்குழு, பொதுக்குழு வரும் 29ம் தேதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாமகவின் அமைப்பு விதிகள் 15, 16 ஆகியவற்றின் அடிப்படையில், கட்சியின் பொதுக்குழு உள்ளிட்ட எந்தக் கூட்டமும் பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோரால் கூட்டப்பட்டு, பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி தலைவரின் தலைமையில் தான் நடத்தப்பட வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்றத்திலும், டெல்லி உயர் நீதிமன்றத்திலும் ஒரு தரப்பினர் தொடர்ந்த வழக்கில் பாமக தலைவர் அன்புமணிதான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுக்குழுவை கூட்டவும், அதற்கு தலைமையேற்கவும் அவரை தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை.

கட்சியின் பெயரை தவறாக பயன்படுத்தி சட்டவிரோதமாக செயற்குழு மற்றும் பொதுக்குழு என்ற பெயரில் ஒன்று கூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறித்தும் தேர்தல் ஆணையத்துக்கு பாமக தலைமை முறைப்படி தெரிவித்திருக்கிறது. எனவே, சேலத்தில் 29ம் தேதி நடைபெறவுள்ள கூட்டம் பாமகவின் பொதுக்குழு கூட்டம் அல்ல. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் கட்சியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது’ என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியது; 5 பேர் பலி

வாஷிங்டன், டிச.24-

டெக்சாஸின் கால்வெஸ்டனுக்கு அருகே மெக்சிகோ கடற்படை விமானம் விழுந்து நொறுங்கியதில் 5 பேர் உயிரிழந்தனர். அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள கால்வெஸ்டனுக்கு அருகே ஏழு பேரை ஏற்றிச் சென்ற ஒரு சிறிய மெக்சிகோ கடற்படை விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும், டெக்சாஸ் கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் மீட்பு பணிகள் நடந்து வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்இரண்டு பேர் பலத்த காயங்கள் உடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். விமானத்தில் இருந்தவர்களில் நான்கு பேர் கடற்படை அதிகாரிகள், நான்கு பேர் பொதுமக்கள். அவர்களில் ஒரு குழந்தையும் அடங்கும் என்று மெக்சிகோ கடற்படை தெரிவித்துள்ளது.விபத்து நடந்த இடத்தில், கடந்த சில நாட்களாக மூடுபனி நிலவிவருவதாக வானிலை ஆய்வாளர் கேமரூன் பாடிஸ்ட் தெரிவித்துள்ளார்

## தேர்தல் பணிகளில் அதிமுக பாஜக தீவிரம்: பழனிசாமி உடன் பியூஷ் கோயல் சந்திப்பு!



சென்னை: டிச.24-

சென்னையில் நேற்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஷ் கோயல் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரான பியூஷ் கோயலை தமிழக சட்டப்பேரவை தேர்தல் பொறுப்பாளராக பாஜக சமீபத்தில் நியமித்தது. இந்நிலையில், பியூஷ் கோயல் ஒருநாள் பயணமாக டெல்லியில் இருந்து சென்னைக்கு இன்று வந்தார். தி.நகரில் உள்ள பாஜக அலுவலகமான கமலாலயத்தில் பாஜக நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

அதன் பின்னர், சென்னை எம்.ஆர்.சி நகரில் உள்ள நட்சத்திர ஒட்டலில் பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்த பேச்சுவார்த்தையின்போது, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாஜக தமிழக தேர்தல் பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக பாஜக தேர்தல் இணை பொறுப்பாளர் அர்ஜுன் ராம் மெக்வால், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, திண்டுக்கல் சீனிவாசன், கே.பி முனுசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பு குறித்து தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இன்றைய தினம் சென்னை வருகை தந்த வரும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பொறுப்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் இணை பொறுப்பாளர் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் மத்திய இணை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் இருவரையும் தமிழக சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவரும் அஇஅதிமுகவின் பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி மற்றும் அஇஅதிமுகவின் முன்னாள் அமைச்சர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இந்த நிகழ்வில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பாஜக தேசியச் செயலாளர் மற்றும் தமிழக பாஜக தேசிய பொறுப்பாளர் அரவிந்த் மேனன், தமிழக பாஜக தேசிய இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி உடன் இருந்தனர்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் அறிவிப்பை ஏற்க மறுத்து செவிலியர்கள் 5வது நாளாக போராட்டம்




சென்னை, டிச.24-

பணி நிரந்தரம் கோரி செவிலியர்கள் போராடி வரும் நிலையில், அவர்களுடன் இரண்டாவது முறையாக பேச்சு நடத்திய அமைச்சர் சுப்பிரமணியன், 723 பேரை பணி நிரந்தரம் செய்வதாக அறிவித்தார். அதை ஏற்க மறுத்து, ஐந்தாவது நாளாக, அரசு செவிலியர்கள் கடும் குளிரிலும் போராட்டத்தை தொடர்ந்தனர்.தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில், பணி நிரந்தரம், சம வேலைக்கு, சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 18ம் தேதி, சென்னை சிவானந்தா சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் செவிலியர்கள் ஈடுபட்டனர். இறக்கி விட்டனர்அப்போது, மக்கள் நல்வாழ்வு துறை செயலர் செந்தில்குமாருடன், சங்க நிர்வாகிகள் நடத்திய பேச்சில் தீர்வு ஏற்படாததால், போலீசார் அனுமதித்த நேரத்தை தாண்டியும் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால், அவர்களை கைது செய்த போலீசார், கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறக்கி விட்டனர்.இரவு நேரத்திலும் அங்கே போராட்டத்தை செவிலியர்கள் தொடர்ந்ததால், மீண்டும் கைது செய்யப்பட்டு, மண்டபத்தில் அடைத்தனர். பின், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சுப்பிரமணியன் பேச்சு நடத்தினார். அதில் உடன்பாடு ஏற்படாத நிலையில், மாலையில் விடுவிக்கப்பட்ட செவிலியர்கள், கூடுவாஞ்சேரியில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில், போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.செவிலியர்கள் போராட்டம் ஐந்தாவது நாளாக தொடர்ந்த நிலையில், அவர்களுடன் அமைச்சர் சுப்பிரமணியன், நேற்று மீண்டும் பேச்சு நடத்தினார். அப்போது, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்க நிர்வாகிகளுடன், மற்ற செவிலியர் சங்கத்தினரும் பங்கேற்றனர். அமைச்சரின் கோரிக்கையை சில சங்கங்கள் ஏற்ற நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சங்க நிர்வாகிகள் ஏற்க மறுத்து, நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவு அறிவிப்பதாக தெரிவித்தனர்.

அரசாணைஅமைச்சர் சுப்பிரமணியன் கூறியதாவது:நிரந்தர பணியாளர்களை போல, தொகுப்பூதிய செவிலியர்களுக்கும் மகப்பேறு விடுப்பு வேண்டும் என்ற கோரிக்கைக்கு, அரசாணை வெளியிடப்பட உள்ளது.கடந்த 2014 15ல், தற்காலிக செவிலியர்களை, மருத்துவ பணியாளர் தேர்வாணையம் வாயிலாக, அன்றைய முதல்வர் ஜெயலலிதா நியமித்தார்.மேலும், இரண்டு ஆண்டுகள் பணி செய்த பின், செவிலியர் துறையில் காலி பணியிடம் உருவானால், பணி நிரந்தரம் என, சொல்லப்பட்டு, பணி நியமனம் நடந்துள்ளது; இந்த முறையே தவறு. எனினும், 7,000க்கும் மேற்பட்ட செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு உள்ளனர். இந்த அரசு பொறுப்பேற்ற பின், 3,614 பேரை பணி நிரந்தரம் செய்துள்ளோம். தற்போது, 8,322 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.தேர்தல் அறிக்கையில் சொன்னது போல, தொகுப்பூதிய செவிலியர்களுக்கான ஊதியம், 14,000 ரூபாயில் இருந்து, 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது, 169 பணியிடங்களுக்கு பணி ஆணைகள் தயார் செய்யும் பணி நடந்து வருகிறது.அத்துடன், பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த செவிலியர் கண்காணிப்பாளர் நிலை 2 பதவி உயர்வு, 266 பேருக்கு வழங்கப்பட உள்ளது. அ தேபோல், செவிலியர் போதகர் நிலை 2 பணியிடங்களுக்கு, 140 பேர் பதவி உயர்வு பெறுகின்றனர்.

மேலும், அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டடங்களில், 148 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இதுபோன்றவற்றால், 723 தொகுப்பூதிய செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர். மற்ற, 7,599 பேருக்கு காலி பணியிடங்களுக்கு ஏற்ப பணி நிரந்தர ஆணை வழங்கப்படும்.கொரோனா காலத்தில் பணியாற்றிய, 716 பேரும் தொகுப்பூதிய அடிப்படையில், நியமிக்கப்பட உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆர்.எஸ்.எஸ்., ஒரு தேசியவாத அமைப்பு; ஒருபோதும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை கொண்டிருப்பதில்லை: மோகன் பாகவத்

புதுடில்லி:, டிச.24-

''ஆர்.எஸ்.எஸ்., ஒரு தீவிரமான தேசியவாத அமைப்பு; ஒருபோதும் முஸ்லிம் எதிர்ப்புணர்வை கொண்டிருப்பதில்லை,'' என, அதன் தலைவர் மோகன் பாகவத் தெரிவித்துள்ளார்ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின், 100வது ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மேற்கு வங்கத்தின் கொல்கட்டாவில் நிகழ்ச்சி ஒன்று நேற்று முன்தினம் நடந்தது. இதில், பங்கேற்ற ஆர்.எஸ்.எஸ்., தலைவர் மோகன் பாகவத் பேசியதாவது: சூரியன் கிழக்கில் உதிக்கிறது. எப்போது இருந்து இந்த செயல் நடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. சூரியன் கிழக்கில்தான் உதிக்கிறது என்பதற்கு நம் அரசியலமைப்பின் ஒப்புதல் தேவையா? தேவையில்லை. இதுபோல், ஹிந்துஸ்தான் ஒரு ஹிந்து தேசம்.

இந்தியாவை தங்கள் தாய்நாடாக கருதுவோர், நம் கலாசாரத்தை பாராட்டுகின்றனர். ஹிந்துஸ்தான் நிலத்தில் இந்திய மூதாதையர்களின் மகிமையை நம்பும், போற்றும் நபர் உயிருடன் இருக்கும் வரை இந்தியா ஒரு ஹிந்து தேசம். இது தான், ஆர்.எஸ்.எஸ்.,சின் சித்தாந்தம். பார்லிமென்ட் எப்போதாவது நம் அரசியலமைப்பை திருத்தி, 'இந்தியா ஒரு ஹிந்து தேசம்' என்ற வாக்கியத்தை சேர்க்க முடிவு செய்தால், அது அரசின் விருப்பம். அவ்வாறு செய்தாலும், செய்யாவிட்டாலும் அதைப்பற்றி எங்களுக்கு ஒரு கவலையும் இல்லை. அதுதான் உண்மை.

தேசியவாத அமைப்புபிறப்பை அடிப்படையாக கொண்ட ஜாதி அமைப்பு ஹிந்துத்வாவின் முத்திரை அல்ல. பண்பாடு மற்றும் பெரும்பான்மையாக உள்ளோரின் ஹிந்து மத தொடர்புகளை கருத்தில் கொண்டு, இந்தியா ஒரு ஹிந்து தேசம் என ஆர்.எஸ்.எஸ்., வாதாடி வருகிறது. மதச்சார்பற்ற என்ற வார்த்தை அரசியலமைப்பின் முகவுரையில் முதலில் இடம்பெறவில்லை.முன்னாள் பிரதமர் இந்திரா அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட போது, 1976ல் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் வாயிலாக சோசலிசம் மற்றும் மதச்சார்பின்மை என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன.தவறான பிரசாரம் காரணமாக, முஸ்லிம்களின் எதிரி ஆர்.எஸ்.எஸ்., என்ற பிம்பம் உருவாக்கப்பட்டு வருகிறது. இது, தீவிரமான தேசியவாத அமைப்பு. ஒருபோதும், முஸ்லிம் எதிர்ப்பு உணர்வை கொண்டிருப்பதில்லை.நேரில் வந்து பாருங்க

ஆர்.எஸ்.எஸ்., பணிகளை நேரில் பார்த்த சிலர், 'நீங்கள் தேசியவாதிகள்; ஹிந்துக்களின் பாதுகாப்புக்காக வாதிடுகிறீர்கள்; அவர்களை ஒருங்கிணைக்கிறீர்கள். நீங்கள் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் அல்ல' என, குறிப்பிடுகின்றனர். அவ்வாறு சொல்பவர்கள் எல்லாம், ஆர்.எஸ்.எஸ்.,சின் செயல்பாடுகளை நேரில் கண்டவர்கள். எனவே, ஆர்.எஸ்.எஸ்., அமைப்பு பற்றி பேசுபவர்கள், எங்கள் செயல்பாடுகளை நேரில் வந்து பார்க்க வேண்டும்.மாற்றிக்கொள்ளுங்கள்அப்படி ஏதாவது முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு இருப்பது தெரிந்தால், உங்கள் கருத்துகளை சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறு இல்லையென்றால், ஆர்.எஸ்.எஸ்., தொடர்பான உங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின் கருத்துகளை புரிந்துகொள்ள முடியாதவர்களின் மனதை யாராலும் மாற்ற முடியாது.நம் அண்டை நாடான வங்கதேசத்தில், சிறுபான்மையினராக வசிக்கும் ஹிந்துக்கள் பயங்கரமாக தாக்கப்படுகின்றனர். இங்குள்ள ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதை கண்டிக்க வேண்டும்; தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.




# திருமலைக்கோடி ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரியில் விளக்கேற்றும் விழா

வேலூர், டிச.24-

வேலூர் மாவட்டம் ஸ்ரீபுரம் திருமலைக்கோடியில் அமைந்துள்ள ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரியின் பி.எஸ்.சி. (நர்சிங்) 20 ஆம் ஆண்டு மற்றும் டிப்ளமோ நர்சிங் 18ஆம் ஆண்டு 140 மாணவ, மாணவிகளுக்கான விளக்கேற்றும் விழா, அருள்திரு ஸ்ரீ சக்தி அம்மா அவர்களின் அருளாசியுடன் ஸ்ரீ நாராயணி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் ஸ்ரீ நாராயணி குழும இயக்குநர் பேராசிரியர் என். பாலாஜி தலைமையில், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எம். ரோகிணி தேவி உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைத்தனர்.




# பில்லூர் கிராம மக்கள் கண்மாயில் தனிநபர் ஆக்கிரமிப்பு அகற்றக்கோரி மனு கொடுத்தனர்

சிவகங்கை, டிச.24-

சிவகங்கை வட்டம் பில்லூர் கிராமத்தில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இங்கு கண்மாய் நீர்ப்பிடிப்புப்பகுதியான அழகப்பா ஊரணியை தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள் ளதைக் கண்டித்து, உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடத்தில் மனு ஒன்றினை அளித்தனர்.

இதில் வழக்கறிஞர் பில்லூர் கார்த்திகேயன், முன்னாள் மாவட்ட கவுன் சிலர் கே. பி. இராமசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முருகன் தலைமையில் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட கிராமப் பொதுமக்கள் கோரிக்கை மனுவளித்தனர்.

இதனிடையே பேசிய கிராம முக்கியஸ்தர்கள் கூறும்போது நாங்கள் ஏற்கனவே பலமுறை மனுக்களை இதே மாவட்ட ஆட்சியரிடத்திலும் , வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் மற்றும் வருவாய் கோட்டாட்சியரிடத்திலும் கொடுத்துவிட்டோம் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். இந்த மனுவிற்கும் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் ஊர் பொது மக்களை ஒன்றுதிரட்டி பெரியளவில் போராட்டம் நடத்துவோம் எனவும் தெரிவித்தனர்.




■ திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கொடைக்கானல் செல்லும் சாலையில் ஆக்கிமிரப்பு கடைகளை அகற்ற, சாலையோர வியாபாரிகள் எதிர்ப்பு போலீசார் வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை




# குரோம்பேட்டையில் இரட்சகர் இயேசு கிறிஸ்து சபை ஊழியங்கள் சார்பில் கிறிஸ்மஸ் விழா

## சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு நலதிட்ட உதவி வழங்கி வாழ்த்து தெரிவித்தார்

குரோம்பேட்டை, டிச.24-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை சேம்பர்ஸ் காலனி பகுதியில் இரட்சகர் இயேசு கிறிஸ்து சபை ஊழியங்கள் சார்பில் கிறிஸ்மஸ் விழா பாஸ்டர் டாக்டர் இமானுவேல் சந்த்திரன் தலைமையில் இயேசுவின் வரலாறு குறித்தும், பக்திபாடல்பாடி கிறிஸ்மஸ் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு கேக்வெட்டி கிறிஸ்மஸ் விழா குறித்து சிறப்புரையாற்றி ஏழை, எளிய மக்கள் 300 க்கும் மேற்படோருக்கு நலதிட்ட உதவிகளான சேலைகள், குளிர்கால போர்வைகள், லூங்கிகள் வழங்கபட்டு அனைவருக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். நிகழ்ச்சியின் போது அப்பகுதி சுற்றியுள்ள சகோதர, சகோதிரிகள், ஊர் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலர் மத பாகுபாடு இன்றி கலந்து கொண்டு கிறிஸ்மஸ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

புகழ் பெற்ற வேலூர் நறுவீ மருத்துவமனையில் பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் நிறுவனர் தின விழா

# ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, முதியோர்களுக்கு மதிய உணவு உள்ளிட்ட நலதிட்டம் வழங்கிய நறுவீ நிறுவனத் தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத்

வேலூர், டிச.24-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப்பாளையம் வடக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை, புகழ்பெற்ற வேலூர் நறுவீ மருத்துவமனையில் நடைபெற்ற நிறுவனர் தின விழா ஏழை பள்ளி மாணவர்களின் மேல் படிப்புக்கு கல்வி உதவித் தொகை, முதியோர்களுக்கு மதிய உணவு உள்ளி நல திட்டங்கள் வழங்கப்பட்டது. விழாவையொட்டி மருத்து வமனை ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட பல்வேறு கலாச்சார போட்டிகளில் பங்கேற்று சிறப்பிடம் பெற்றவர்களுக்கு மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத், பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். வேலூர் நறுவீ மருத்துவமனையில் நிறுவனர் தின விழா (20.12.2025) அன்று மாலை மருத்துவமனை வளாகத்தில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன், நறுவீ மருத்துவமனை நிறுவனர் முனைவர். ஜி.வி.சம்பத் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியையொட்டி முதியோர் இல்லத்தை சேர்ந்தவர்களுக்கு மதிய உணவு மற்றும் ஏழை மாணவர்களின் மேற்படிப்புக்கான கல்வி உதவித்தொகையை உள்ளிட்ட நலத்திட்டங்களை மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் வழங்கினார். இந்நிகழ்வையொட்டி நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையிலும், நாட்டில் பசுமையை பற்றிய பற்றிய விழிப்புணர்வு, உலக சமத்துவம், மதங்களுக்கு இடையே சகோதரத்துவம், போதை ஒழிப்பு, உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் பரதநாட்டியம், தனிநபர் மற்றும் குழு நடனங்கள், பாட்டுக்கு பாட்டு, ஆடல் பாடல், பேஷன் ஷோ, ரங்கோலி, முக ஓவியம், காய் கறிகளை கொண்டு பல்வேறு வடிவமைப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சிக்கு நறுவீ மருத்துவமனை நிறுவனத் தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் தலைமை வகித்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு



பரிசுகள் வழங்கி பாராட்டி சிறப்புரையாற்றினார்.

நறுவி நிறுவன தலைவர் ஜி.வி .சம்பத் கூறியதாவது: நிறுவனர் தின விழா என்பது நறுவீ குடும்ப விழாவாகும். கடந்த ஐந்து ஆண்டுகளாக இம்மருத்துவமனை உங்களின் சேவை மற்றும் அற்பணிப்பு காரணமாக படிப்படியாக இம்மருத்துவமனை உயர்ந்து வருகிறது. இம்மருத்துவமனையில் அரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் கிரிட்டிகளான அறுவை சிகிச்சைகள் நவீன முறையில் சிறப்பாக செய்வதின் மூலம் நோயாளிகள் குணமடைந்து மருத்துவமனையை பாராட்டி வருகின்றனர். இங்கு மருத்துவ சிகிச்சை என்பது வணிக ரீதியானாது அல்ல, உன்னதமான அற்பணிப்புடன் நோயாளிகளை காப்பாற்றும் பணி இங்கு நடைபெற்று வருகிறது. இம்மருத்துவமனையில் செய்து வரும் மருத்துவ சேவைகள் பற்றி சமூக ஊடகம் மற்றும் வளைதலங்களில் சிறப்பான முறையில் பதிவிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், நமது மருத்துவ சேவைகள் பற்றி அனைவரும் அறிந்திடும் வகையில் நாம் அதிக அளவில் சமூக ஊடகங்களில் பதிவிட வேண்டும். இன்றைய கால கட்டத்தில் இளைஞர்களின் வாழ்க்கை முறை மாறி வருகிறது. மது மற்றும் போதைக்கு அடிமையாகி வரும் நிலை உள்ளது. இதனை தடுக்கும் வகையில் மருத்துவ பணியாளர்கள் இளைஞர்களுக்கு மது மற்றும் போதையினால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துரைத்து நல்வழிபடுத்த வேண்டும் எனவும், இந்த கலை விழாவில் மருத்துவமனை துணைத் தலைவர் அனிதா சம்பத், செயல் இயக்குநர் பால் ஹென்றி, மருத்துவ சேவைகள் தலைவர் டாக்டர். அரவிந்தன் நாயர், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். ஜேக்கப் ஜோஸ், மருத்துவ கல்வி இயக்குநர் டாக்டர். திலீப் மத்தாய், பொது மருத்துவ நிபுணர் டாக்டர். குணசேகரன், மயக்கவியல் நிபுணர் டாக்டர். சரவணன் அங்கிசெட்டி, தலைமை இயக்குதல் அலுவலர் சரவணன் இராமன் மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள், செவி லியர்கள், ஊழியர்கள் பெருமளவில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை மருத்துவமனை மனிதவள பொது மேலாளர் லலிதா வரவேற்றார். இறுதியில் தலைமை செவிலியர் அலுவலர் மேரி மார்ஜெரி நன்றியுரையாற்றி விழா நிறைவு பெற்றது.





# கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு தாம்பரத்தில் ஜெய கிறிஸ்து ஆலயத்தில் நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்

தாம்பரம், டிச.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் உள்ள ஜெய கிறிஸ்து ஆலயத்தில் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முன்னாள் நகர மன்ற உறுப்பினர் மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் எம்.வேலு தலைமையில் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன் முன்னிலையில் 33வது மேற்கு வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஜேசுராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் கேக் வெட்டி கொண்டாடி வாழ்த்துக்கள் தெரிவித்தனர் அதனைத் தொடர்ந்து பெண்களுக்கு புடவை மற்றும் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சியில் வி. வி.பாண்டுரங்கன், எம்.பிரகாஷ் குமார், கே.கோபால், பி.என்.தங்கராஜ், எம்.ரவி, எம்.பாஸ்கர், வட்ட கழக செயலாளர் பி.ராஜா, எம்.கோவிந்தராஜ், ஃபயர் சர்வீஸ் சுப்பு, எம்.குட்டி என்கின்ற ஆறுமுகம், எல்.டில்லி பாபு, எம்.குமரேசன், வி.ஜி.தேவராஜ், ராபர்ட், ஆர்.சுரேஷ், ஆர்.தனசேகர், என்.நித்தியானந்தன், ஜி.லட்சுமணன், இ.பட்டாபிராமன், ஜி.பாலாஜி மற்றும் போதகர்கள் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இரண்டாம் பாகம் நிச்சயம் வரும் இயக்குனர் பொன்ராம் பேட்டி

தேனி, டிச.24-

தேனி வெற்றி திரையரங்கில் வெளியாகி உள்ள கொம்புசிவி திரைப்படத்தை மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் இரண்டாவது மகன் சண்முக பாண்டியன் மற்றும் படத்தின் இயக்குனர் பொன்ராம் ஆகியோர் இணைந்து படம் பார்ப்பதற்கு வருகை தந்தனர்இதற்காக திரையரங்கிற்கு வருகை தந்த சண்முகபாண்டியன் மற்றும் பொன்ராமிற்கு தேமுதிக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்

தொடர்ந்து செய்தியாளர்களிடம் சந்தித்து பேசிய இயக்குனர் பொன்ராம் வைகை அணை கட்டும் போது பாதிக்கப்பட்ட 12 ஊர்களை சேர்ந்த மக்களை அழைத்து வந்து படம் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

உண்மை சம்பவத்தை சினிமா தன்மையுடன் கலந்து படத்தை உருவாக்கி இருக்கிறோம் இந்த படத்திற்கு மக்கள் நல்ல வரவேற்பு கொடுத்துள்ளனர்.

வைகை அணைக்காக தங்கள் நிலத்தை கொடுத்த ஒரு சில கிராமங்களுக்கு தற்போதும் குடிப்பதற்கு கூட தற்போதும் தண்ணீர் வரவில்லை அது குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் இரண்டாம் பாகம் நிச்சயம் எடுப்பேன் அதற்காக பணிகள் நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து படத்தின் கதாநாயகன் சண்முக பாண்டியன் கூறுகையில் கடந்த ஆறு மாதமாக தேனியில் தான் பட காட்சிகளை எடுத்தோம் எல்லா கிராமங்களும் சென்று மக்களை சந்தித்தோம் அந்த மக்களை அழைத்து வந்து படம் பார்க்க ஏற்பாடு செய்தோம் வைகை அணை தொடர்பான காட்சிகள் வரும்போது ஆரவாரத்துடன் பார்த்து ரசித்தது மகிழ்ச்சியாக இருந்தது

இங்குள்ள மக்களிடம் பழகியுள்ளேன் மதுரையை போல் தேனியும் எனக்கு சொந்த ஊராக மாறி உள்ளது என தெரிவித்தார்.

நான் அடுத்து நான்கு ஐந்து படங்களில் நடிப்பதற்கு கதை கேட்டுள்ளேன் சினிமாவில் தொடர்ந்து நடிப்பேன், அண்ணன் விஜய பிரபாகரன் அரசியலில் பயணிப்பார் என தெரிவித்தார்.

# உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய மாநில அரசுகள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விஐடி பல்கலை வேந்தர் கோ.விசுவநாதன் வலியுறுத்தினார்

தாம்பரம், டிச.24-

செங்கல்பட்டு மாவட்டம் மேடவாக்கத்தில் உள்ள காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியின் பொன்விழா கொண்டாட்டம் சனிக்கிழமை நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற விஐடி வேந்தர் கோ. விசுவ நாதன் பேசியதாவது உலக அளவில் வளர்ந்த நாடுகளில் 60 சதவீதத்துக்கு மேற்பட்டவர்கள் உயர்கல்வி பெற்றவர்களாக உள்ளனர் ஆனால் இது இந்தியாவில் 28 சதவீதமாக உள்ளது இருப்பினும் இந்தியாவில் உயர் கல்வியின் தமிழகம் முதலிடத்தில் இருப்பது பெருமை நாடு முழுவதும் உயர் கல்வி




பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய மாநில அரசுகள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் நாட்டில் 20 சதவீதம் பேர் மட்டுமே அதிக வருவாய் ஈட்டி வராக உள்ளனர் தனிநபர் வருமானத்தில் இந்தியா மற்ற நாடுகளில் காட்டிலும் மிகவும் பின்தங்கி உள்ளது எனவே நாட்டின் பொருளாதார தனிநபரின் பொருளாதார நிலை குறித்து பொதுமக்கள் இடையே அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இதில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பேசிய போது தமிழகத்தில் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஜாதி மத பாகுபாடு இன்றி அனைவருக்கும் சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்படுகிறது இதற்கு வித்திட்டவர் இந்தியா யூனியன் முஸ்லிம் லீக் நிறுவன தலைவர் காயிதே மில்லத் என்றார்.

தொடர்ந்து காணொளி காட்சி வாயிலாக திராவிட கழக தலைவர் வீரமணி உரையாற்றினார் காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியின் புகைப்பட கண்காட்சியை வைகோ திறந்து வைத்து பார்வையிட்டார் நிகழ்வில் தமிழ்நாடு ஜமாத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி ஹபிஸ் அல்ஹாஜ் பி.ஏ.ஹாஜா முஹைனுதீன், பாகவி தென்னிந்தியா திருச்சபையின் ஓய்வு பெற்ற பேராயர் தேவசகாயம் சென்னை பல்கலை முன்னாள் துணைவேந்தர் சேதி மார்ச் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் தலைமை குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன் காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் எம்.ஜி.தாவுத் மியாகான், முதல்வர் மோ.அப்துல் தவாப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை தெற்கு ஒன்றியம் முத்துப்பட்டியில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி

## ஒசெ ஜெயராமன், தலைமை மார்கரேட் கமலா, சிங்கமுத்து, இராஜேஷ்வரி, அழகுசுந்தரம் பங்கேற்பு

சிவகங்கை, டிச.24-

சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அரசனி முத்துப்பட்டி வாக்குச் சாவடி அருகில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட மகளிரணி துணைத் தலைவர் மார்கரேட் கமலா பத்தி னாதன் தலை மையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் கலந்து கொண்டு ஆலோசனைகளையும், எனது வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி என உறுதிமொழியும் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ம.சிங்கமுத்து , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் இராஜேஷ்வரி அண்ணா துரை , ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அழகுசுந்தரம், கழக மூத்த முன்னோடி ரைஸ்மில் நாகராஜன், முத்துப்பட்டி முத்து, கொட்டகுடி சம்பத், ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் கொட்டகுடி தேவேந்திரன் , மகளிரணி கொட்டகுடி லெட்சுமி சம்பத் , கற்பகம் முத்தையா உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை நகர் 21 வார்டில் வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

## சேர்மன் துரை ஆனந்த் , தமகழ்ப்ரியா,அயூப் கான், வீணஸ் இராமநாதன் பங்கேற்பு

சிவகங்கை, டிச.24-

சிவகங்கை நகர் வட்டக்கழ கங்களில் ஆலோசனை கூட்டம் நடை பெற்று வருகிறது.

அந்த வகையில் சிவக ங்கை நகரின் மைய ப்பகுதி யான 21 வார்டுப்பகு தியில் வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டமானது மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர், நகர்மன்ற உறுப்பினர் அயூப் கான் தலைமையிலும், மாநிலக் கழக கொள்கைபரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரப ாகரன், நகர்க்கழக திமுக செயலாளர் வீணஸ் இராமநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கவுன்சிலர் சுப. ஜெயகாந்தன், வீரகாளை, தொகுதி ஐடி விங் அமை ப்பாளர் சதீ ஷ்குமார் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நகர்க்கழக திமுக செயலாளர், நகர்மன்றத் தலைவர் சி. எம். துரை ஆனந்த், கழக கொள்கைபரப்பு துணைச் செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோச னைகளை வழங்கினர்.

இதனிடையே சேர்மன் சி. எம். துரை ஆனந்த் முன்னிலையில் பெண்கள் தாய்க்கழகமாம் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டார்.

லோசனைக்கூட்டத்தில் நாகநாதர் நாச்சியப்பன், வேங்கை பிரபாகரன், தேவஸ்தானம் முருகேசன், வாக்குச்சாவடி பாகநிலை முகவர் ராஜா, இந்திரா நகர் மெடிக்கல் பாரத் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகர்மன்ற உறுப்பினரும், சிவகங்கை மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளருமான அயூப் கான் சிறப்பாக செய்திருந்தார்.



# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், டிச.24-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 354 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தர விட்டார். இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்து ரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் தெரி வித்தார்.


தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், மேலச்செங்குடி கிராமத்தை சேர்ந்த அம்மாசி அவர்களின் மகள் ஐஸ்வர்யா என்பவர் கண்மாயில் நீரில் மூழ்கி இறந்தமைக்காக ரூ.1,00,000ஃ க்கான காசோலையினையும், சடையன்வலசை கிராமத்தை சேர்ந்த முனீஸ்வரி அவர்களின் கணவர் கர்ணன் மின்சாரம் தாக்கி இறந்ததையொட்டி அவர்களின் குடும்பத்துக்கு நிவாரண நிதியான ரூ.1,00,000 க்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்த லைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன் மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி நேர்முக உதவியாளர் (நிலம்) ரகுபதி உதவி ஆணையர் (கலால்) கங்காதேவி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஸ்டார்ட்அப் கிரமங்களில் “கிராமந்தோறும் புத்தொழில்“ திட்டத்தினை துவக்கி வைத்தார்

கடலூர், டிச.24-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நத்தபட்டு, புவனகிரி, பூங்குணம் மற்றும் பிஞ்சனூர் ஆகிய ஸ்டார்ட்அப் கிராமங்களில் “கிராமந்தோறும் புத்தொழில்“ திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் துவக்கி வைத்தார்.




இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு அரசு கிராமப்புறங்களின் வளர்ச்சி யினை மேம்படுத்திடவும், நகரங்களுக்கு இணையாக சிறந்த பொருளாதார சூழலை உருவாக்கிடும் வகையிலும் எண்ணற்ற புதுமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக மாவட்டந்தோறும் குறிப்பிட்ட கிராமங்களை ஸ்டார்ட்அப் கிராமங்களாக தேர்வு செய்து, அக்கிராம வளர்ச்சியினை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் கடலூர் மாவட்டத்தில் ஸ்டார்ட்அப் கிராமங்களாக நத்தபட்டு, புவனகிரி, பூங்குணம் மற்றும் பிஞ்சனூர் ஆகியவை தேர்வுசெய்யப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் வளர்ச்சியினை உறுதி செய்திட கிராமந்தோறும் புத்தொழில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, இன்றைய தினம் கடலூர் மாவட்டத்தில் கிராமந்தோறும் புத்தொழில் திட்டம் நத்தபட்டு, புவனகிரி, பூங்குணம் மற்றும் பிஞ்சனூர் ஆகிய கிராமங்களில் கிராமந்தோறும் புத்தொழில் திட்டம் தொடங்கிவைக் கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள தொழில்முனை வோர்களை ஊக்குவித்து எல்லாவற்றையும் உள்ள டக்கிய தொழில்முனைவு, ஊரக புதுமை, நிலைத்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது. புதிய தொழில்கள் கொண்டு ஊரகங்களில் உள்ளூர் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, உற்பத்தி த்திறனை மேம்படுத்த, கிராமங்களில் புதுமை சார்ந்த வளர்ச்சிக்காக கிராம பஞ்சாயத்துக்களை செயல்படுத்த இந்தத் திட்டமானது செயல்படு த்தப்படுகிறது.

பெரு நிறுவனங்களை Tier 2 மற்றும் Tier 3 நகரங்களில் உள்ள ஸ்டார்ட் அப்களுடன் இணைப்பது மற்றும் கிராமங்களில் ஸ்டார்ட்அப் சூழலை உருவாக்குவது இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் , தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஸ்டார்ட் அப்அலுவலர்கள் செந்தமிழரசன், விபித், கார்த்திக் மற்றும் நான்கு கிராமங்களின் பிரதிநி திகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியம் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் இந்திய தேர்தல் ஆணையத்தின் துணைத் தேர்தல் ஆணையர்பானு பிரகாஷ் எத்துரு இ.ஆ.ப., தலைமையில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அரசு செயலாளர் அர்ச்சனா பட்நாயக் முன்னிலையில் நடைபெற்றது. மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின் குமார் இ.ஆ.ப , இராமநாதபுரம் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் இ.ஆ.ப., , சிவகங்கை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.பொற்கோடி இ.ஆ.ப , விருதுநகர் மாவட்ட தேர்தல் அலுவலர்மாவட்ட ஆட்சித்தலைவர் .சுகபுத்ரா, தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் இ.ஆ.ப., , திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் இ.ஆ, , தூத்துக்குடி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் .க.இளம்பகவத், தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., , திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலர்மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.சுகுமார் , கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவி ரா. அழகுமீனா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் சிறப்பு முகாம்

தேனி, டிச.24-

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரை யின்படி 01.01.2026ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்பு தீவிரத்திருத்தம் பணிகளில் கடந்த 19.12.2025அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களுக்கு தேவையான முகவரி மாற்றம், பிழைத்திருத்தம், புகைப்பட மாற்றம், மாற்று வாக்காளர் அடையாள அட்டை போன்றவைகளை மேற்கொள்ளவும், இடம் பெயர்ந்த மற்றும் இறந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குதல் தொடர்பான சிறப்பு முகாம்களானது 27.12.2025 (சனிக்கிழமை), 28.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் முதற்கட்ட சிறப்பு முகாம் மற்றும் 03.01.2026 (சனிக்கிழமை), 04.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் இரண்டாம் கட்ட சிறப்பு முகாம்; நடத்திடுமாறு தேர்தல் ஆணையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தேனி மாவட்டத்திலுள்ள 1394 வாக்குச்சாவடிகளிலும், மேற்கண்ட தேதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

மேற்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் வாக்காளர்கள், புதிதாக பெயர் சேர்க்க படிவம்6, பெயர் நீக்கம் செய்ய படிவம்7 மற்றும் முகவரி மாற்றம், பெயர் திருத்தம், வயது திருத்தம், மாற்று வாக்காளர் அடையாள அட்டை கோருதல், தொகுதி மாற்றம் போன்றவற்றிற்கு படிவம்8லும் பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படத்தினை இணைத்து சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடியில் அளித்திடலாம்.

மேற்கண்ட சிறப்பு முகாம் நாட்கள் உட்பட அலுவலக வேலை நாட்களிலும் தொடர்புடைய நிர்ணயிக்கப்பட்ட வாக்கு ச்சாவடி மைய அலுவலரிடமும் (DLO) அனைத்து வாக்காளர் பதிவு அலுவலகங்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவல கங்கள்ஃ வட்டா ட்சியர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களிலும் விண்ணப்பித்து 18.01.2026 ம் தேதிவரை விண்ணப்பி க்கலாம். நேரில் வர இயலாதவர்கள் Voters.eci.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் மற்றும் Voter Helpline App மூலமாகவும் விண்ணப்பித்துக் கொள்ளலாம் என தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.









■ சிவகங்கை மாவட்டம், சுந்தரநடப்பு பகுதியில் அமைந்துள்ள மாண்ட்போர்ட் சிபிஎஸ்இ (CBSE) பள்ளியில், 2025ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை மிகச் சிறப்பாகக் இன்று கொண்டாடப்பட்டது. பள்ளியின் கேஜி (KG) மற்றும் ஆரம்பப்பள்ளி மாணவர்கள் பங்கேற்ற சிறப்பான கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கிறிஸ்துமஸ் தாத்தா (Santa Claus) வேடமிட்ட நபர் மாணவர்களுக்கு இனிப்புகளை வழங்கி உற்சாகப்படுத்தினார். விழாவில் அன்பு மற்றும் அமைதியின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட துணை கண்காணிப்பாளர் பிரான்சிஸ், பள்ளியின் முதல்வர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், மாற்றுத்திறனாளிகள் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## தியாகசீலர் கக்கன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு

# தும்பைபட்டி கிராமத்தில் உள்ள மணி மண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

மதுரை, டிச.24-

மதுரை மாவட்டம் தியாகசீலர் கக்கன் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு மேலூர் வட்டம், தும்பைபட்டி கிராமத்தில் உள்ள மணி மண்டபத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

விடுதலைப் போரட்ட தியாகியாவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் அமைச்சராக பணியாற்றி மக்களுக்கு சிறந்த சேவையாற்றி தியாகசீலர் கக்கன் அவர்களின் மாண்பை உலகறியச் செய்யும் நோக்கில் தமிழக அரசின் சார்பில் தியாகசீலர் கக்கன் அவர்களுக்கு தும்பைப்பட்டியில் மணிமண்டபம் அமைத்து, தலைவர்களுடன் உள்ள அவரது புகைப்படங்களை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது தொண்டினை மற்றவர்ளுக்கு எடுத்து செல்லும் நோக்கில் ஆண்டுதோறும் அவரது பிறந்நத நாளை தமிழக அரசு சிறப்பாக கொண்டாடி வருகிறது. தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறையின் மூலம் மணிமண்டபம் நாள்தோறும் திறந்து வைக்கப்பட்டு சுற்றலா பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் அவரது தியாகம் குறித்து விளக்கி கூறப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இ.சாலி தளபதி உதவி மக்கள் தொடர்பு அலுவலர் வா.பெ.வினோத் கொட்டாம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா மார்த்தாண்டம் மற்றும் சங்கர் கைலாசம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், தும்பைபட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தியாகசீலர் கக்கன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவசிலைக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இன்று (23 122025) மாலையணிவித்து மரியாதை செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் , மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை ஆகியோர் உடன் உள்ளனர்



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருப்பூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையில் கீழ் செயல்படும் சமூகநீதி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களின் தனித்திறனை வெளிக்கொணரும் வகையில் நல்லோசை களமாடு கலைக்கொண்டாட்ட நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுடன் “Coffee With Collector” என்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மரு.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திருப்பூர் ரீட்ஸ் வாசிப்பு இயக்கத்தினை துவக்கி வைத்து வாசகர்களுடன் கலந்துரையாடினார்.




# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், டிச.24-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே., தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். வேளாண் உற்பத்திற்கு முக்கியத்துவம் அளித்து அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்ற அனைத்து திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாக கிடைத்திட மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன்றன. திருப்பூர் மாவட்டத்தின் இயல்பான வருடாந்திர மழை 678.26 மி.மீ அளவு டிசம்பர் 2025 ஆம் மாதம் முடிய சராசரியாக பெய்ய வேண்டிய மழை அளவு 387.16 மி.மீ. நடப்பு 2025ம் ஆண்டில் நாளது வரை பெய்த மழையின் அளவு 387.16 மி.மீ ஆகும். சராசரியாக பெய்ய வேண்டிய மழையின் அளவைவிட 291.1 மி.மீ குறைவு ஆகும். பயிர் சாகுபடிக்கு தேவையான நெல் மற்றும் பிற பயிறு வகை தானியங்கள் விதைகள் போதிய அளவு இருப்பில் உள்ளது.

அதன்படி, நெல் 35.049 மெட்ரிக் டன், தானிய பயிறுகள் 62.72 மெட்ரிக் டன், பயிறு வகை பயிறுகள் 52.31 மெட்ரிக் டன் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகள் 23.73 மெட்ரிக் டன் இருப்பிலுள்ளது. நெல் சாகுபடிக்கு தேவையான யூரியா, பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளது. யூரியா 2760 மெட்ரிக் டன், டி.ஏ.பி. 1755 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் 4069 மெட்ரிக் டன் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 729 மெட்ரிக் டன் அளவு இருப்பில் உள்ளது. கடந்த 20 ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் இருந்து பல்வேறு விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முந்தைய கூட்டரங்களில் விவசாயிகள் வழங்கிய மனுக்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து துறை வாரியாக மாவட்ட ஆட்சியர் மனுதாரர்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டதுடன் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளையும் காலதாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகளிடமிருந்து 200 கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார். முன்னதாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு வேளாண் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர துணை காவல் ஆணையர் பிரவீன் கௌதம் மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப் புத்துறை) ஆர்.சந்திரன், இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) பாமாமணி, கூட்டுறவு சங்க ங்களின் இணைப்பதிவாளர் பிரபு, மாவட்ட வன அலுவலர் ராஜேஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், துணை ஆட்சியர்கள் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா டிச.24ம் தேதி துவக்கம்

கோவை, டிச.24-

கோவை மாவட்டம் கொடிசியா வளாகத்தில் ‘கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா 2025’ நடைபெற உள்ளது. இதுகுறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் ஷாப்பிங் திருவிழாவின் தலைவர் நந்தகோபால், கொடிசியா தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் கூறியதாவது, கோவை கொடிசியா வளாகத்தில் டிச. 24 ம் தேதி முதல் ஜனவரி 1ம் தேதி கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா 2025ன் 11வது பதிப்பு நடைபெற உள்ளது.

சுமார் ஒன்றரை லட்சம் சதுர அடி பரப்பளவில் மெகா ஷாப்பிங் திருவிழா நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சியில் சுமார் 350 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளனர். குழந்தைகள், பெரியவர்கள் என அனைவருக்கும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டு அரங்குகள், உணவு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளது.

11வது பதிப்பாக நடைபெறும் கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா 2025ல் வீட்டு உபயோக சாதனங்கள், சமையலறை பொருட்கள், பர்னிச்சர்ஸ், தங்கம் மற்றும் வைர நகைகள், ஜவுளி வகைகள், உடற்பயிற்சி சாதனங்கள், பரிசு பொருட்கள், சூரிய ஒளி சாதனங்கள், காலணிகள், பாரம்பரிய ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், ஆட்டோ மொபைல் உதிர் பாகங்கள், சுற்றுலா செல்வதற்கான தகவல் அரங்குகள், நிதி நிறுவனங்கள் என நுகர்வோர்களின் அனைத்து விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக இந்த கண்காட்சி அமைய உள்ளது.காலை 11 மணிக்கு தொடங்கி இரவு 8 மணி வரை ஷாப்பிங் திருவிழா நடைபெறும். இந்த கண்காட்சிக்கான நுழைவு கட்டணம் ரூ.50 என வசூல் செய்யப்படும் என தெரிவித்தனர்.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகைகள் வர உள்ளது. வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க நினைப்போர் இங்கு சென்று குடும்பத்துடன் ஷாப்பிங் செய்து மகிழலாம். இவ்வாறு தெரிவித்தனர். பேட்டியின் போது. கொடிசியா செயலாளர் யுவராஜ், கண்காட்சி துணைத் தலைவர் வரதராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.



## “பொருளாதார வளர்ச்சியை கையாளுவதுஎப்படி?” கலந்துரையாடல் சிறப்புக் கூட்டம்: “ஒய்ஸ்மென்ஸ் கிளப்” நடத்தியது

காரைக்குடி, டிச.24-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஒய்ஸ்மென்ஸ் கிளப் (டைமண்ட் கிளப்) சார்பாக “பொருளாதார வளர்ச்சி” பற்றிய கருத்தரங்கம், அழகப்பா பல்கலைக்கழக எல். சிடி.எல். பழனியப்ப செட்டியார் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் எல்.எம். லெட்சுமணன், சிங்கப்பூர் ஆடிட்டர் அருண்.ஜி. அழகப்பன் ஆகியோரின் முன்னிலையில் தொடங்கியது. இதில், சென்னை” பொருளாதார நிபுணர் “ஆனந்த் சீனிவாசன் பங்கேற்றார். தமிழகம் மற்றும் காரைக்குடி நகரிலிருந்து 500 பேர்கள் கலந்து கொண்டு, “பங்கு வணிக பரிமாற்றம் (ஷேர்மார்க்கெட்) கம்பெனிகளிடம் பெறுவது, வங்கியில் வைப்புத் தொகை (FD) யில் முதலீடு செய்தல், தங்கம் வாங்குவதில் முதலீடுகளை செய்வது பற்றிய கேள்வி களுக்கு, ஆனந்த் சீனிவாசன் ஒருமணிநேரம் பதிலும்,




ஆலோசனைகளும், கூறியதோடு, தங்களது வருவாயில்இழப்புகளைத் தவிர்த்திடதக்க முன் ஆலோச னைகளுடன், செயல்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை ஒய்ஸ்மென்ஸ் கிளப் தலைவர் தங்கதுரை, செயலாளர் வெங்கடாசலம், பொருளாளர் முருகப்பன், ஒய்ஸ்மென்டி கிளப் தலைவர் லெட்சுமி சௌந்தரராஜன், செயலாளர் சிவகாமி வெங்கடாசலம், பொருளாளர் லாவண்யா பார்த்தசாரதி ஆகியோர் சிறப்பாக செய்தனர். சிறப்பு விருந்தினர் சென்னை ஆனந்த் சீனிவாசனைப் பாராட்டி தொழில் வணிகக் கழக நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்.

வேலூரில், விழுப்புரம் ஸ்ரீ நாராயணி சத்தியமா 50வது ஜெயந்தி விழா முன்னிட்டு

## போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம்: வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு

வேலூர், டிச.24-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், திருமலைகோடி, விழுப்புரம் ஸ்ரீ நாராயணி பீடம் சார்பில் வேலூரில் போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம், ஸ்ரீ சக்தி அம்மாவின்ன் 50வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் “வேலூர் மாரத்தான் 2025 - ரன் அகெயின்ஸ்ட் ட்ரக்ஸ்” நிகழ்வு 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீபுரம் தங்கக் கோவில் அறங்காவலரும் ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் இயக்குநருமான முனைவர் எம். சுரேஷ்பாபு தலைமையில்நடைபெற்றது.

வேலூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு தொடங்கிய மாரத்தான் ஓட்டத்தை வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் மற்றும் மாநகராட்சி மேயர் சுஜாதா கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்வில் பிரபல திரைக்கலைஞர் புகழ், மாவட்ட விளையாட்டு அலுவலர் டாக்டர். ஏ. பாலமுருகன் மற்றும் ஸ்ரீ நாராயணி மருத்துவமனை இயக்குநர் டாக்டர். என். பாலாஜி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பல்வேறு வயது பிரிவுகளில் சுமார் 1500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இந்த போட்டியில், வெற்றியாளர்களுக்கு ரூ.1 லட்சத்திற்கும் அதிகமான ரொக்கப் பரிசுகள் வழங்கினர். முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.15,000 வழங்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு, மாவட்ட ஆட்சியர் மரு.மனிஷ் நாரணவரே முன்னிலையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பங்கேற்புத்துறைகளுக்கான கூராய்வுக் கூட்டம்

திருப்பூர், டிச.24-

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் புதுக்கோட்டை விஜயா மற்றும் உறுப்பினர்கள் முனைவர் மோ.கசிமிர் ராஜ் வழக்கறிஞர் ஆர்.ஜெயசுதா, ஸ்ரீகாவியா நாகராஜன் ஆகியோர் தலை மையில், மாவட்ட ஆட்சியர் மரு.மனிஷ் நாரணவரே முன்னிலையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பங்கேற்புத்துறைகளுக்கான கூராய்வுக்கூட்டம் நடைபெற்றது.




மத்திய அரசின் 2005 ஆம் ஆண்டுக்கான குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் பிரிவு 17(1)ன் அடிப்படையில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு, இவ்வாணையத்திற்கான தலைவர் மற்றும் 6 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, 18.01.2023 முதல் செயல்பட்டு வருகிறது..

இந்நிலையில், தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டை விஜயா மற்றும் உறுப்பினர்கள் முனைவர்.மோ.கசிமிர் ராஜ், வழக்கறிஞர் ஆர்.ஜெயசுதா, ஸ்ரீ காவியா நாகராஜன் ஆகியோர் நேற்று” இலவசம் மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம்” 2009 (RTE) ன் கீழ் குழந்தைகள் இலவசக்கல்வி பெறுவதற்கான இடஒதுக்கீடு குறித்தும், பள்ளியில் குழந்தைகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் திருப்பூர் செட்டிபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் தேவா மெட்ரிக்குலேசன் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

மேலும், இக்கூட்டத்தில், பள்ளி இடைநிறுத்தம் செய்யப்பட்ட குழந்தைகளை கல்வியை தொடர வைப்பது, குழந்தை தொழிலாளர் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள், குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், போதைப்பொருட்கள் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பள்ளிகளில் குழந்தைகளின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பள்ளி மேலாண்மைக்குழு அமைக்கப்பட்டது, குழந்தைகள் பாராமரிப்பு இல்லங்கில் உள்ள குழந்தை களின் நிலை, வளரிளம் பருவ குழந் தைகளின் கர்ப்பம், கருக்கலைப்பு செய்யப்பட்டது, அங்கன்வாடி குழந்தைகளின் வளர்ச்சி நிலை, குழந்தைத் திருமணம் அதிகம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள், அதை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், திருப்பூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட கிராம மற்றும் வட்டார அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டங்கள் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளின் பாதுகாப்பிற்காகவும், நலனுக்காகவும் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாநகர காவல் துணை ஆணையர் பிரவீன் கௌதம் மாவட்ட வருவாய் அலுவலர் கா.கார்த்திகேயன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ந.ரியாஷ் அஹமது பாஷா மற்றும் தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## சிவகங்கை அருகே பட்டா வேண்டி ஆதிதிராவிட மக்கள் கோரிக்கை

சிவகங்கை, டிச.24-

சிவகங்கை வட்டம் அரசனி முத்தப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமம் நெம்மேனி ஆகும். முழுக்க முழுக்க ஆதிதிராவிடர் சமூக மக்கள் வசிக்கும் பகுதியான இந்த நெம்மேனி கிராமத்தில் சுமார் 16 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பட்டா வேண்டி தொடர்ந்து பல கோரிக்கை மனுக்களை அளித்து வந்த நிலையில் மீண்டும் இன்றைய தினத்தில் மாவட்ட ஆட்சியர் குறைதீர் தினமான திங்கட்கிழமை மனுக் கொடுத்தனர்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய சமூக ஆர்வலர் டெய்லர் ஆறுமுகம் என்பவர் எங்கள் பகுதி முழுக்க முழுக்க பட்டியல் இனத்தவர் வசிக்கும் பகுதியாகும், மேலும் மாவட்ட தலைநகருக்கு அருகாமையில் இருக்கும் எங்கள் ஊருக்கு இந்த நிலைமைதான் எனவும், பல்வேறு காலகட்டத்தில் மனுக்களை கொடுத்து கொடுத்து எந்த தீர்வுமே கிடைக்க வில்லை எனவும் இது தொடரும் பட்சத்தில் எங்களது சமூக மக்களை ஒன்று திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்த இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

முன்னதாக நெம்மேனி கிராமப் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக மயில் முகப்பு வளைவில் ஆரம்பித்து கோஷமிட்டவாறே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து சேர்ந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161